ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் 12 MAR 2020 சென்னை-600 015

141

சுருக்கம்

14682

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – நிலமாற்றம் – திருவள்ளூர் மாவட்டம் – திருத்தணி வட்டம் – திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான புல எண்கள். 150/22, 151/2C, 151/6, 151/7B, 151/8B, 151/10B, 151/11B, 151/14, 151/15–ல் உள்ள 0.28.5 ஏர்ஸ் (75 சென்ட்) ரூ.32.25 இலட்சம் மதிப்புள்ள புன்செய் நிலத்தினை நிலக்கிரயமின்றி இலவசமாக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறைக்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–4) துறை**

**அரசாணை (நிலை) எண்.57**

**நாள்: 05.03.2020**
**விகாரி வருடம், மாசி 22,**
**திருவள்ளுவர் ஆண்டு 2051,**

DIRECTORATE OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ 11 MAR 2020 CHENNAI-600 015

படிக்கப்பட்டவை.

1. மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1292/ 2019/ அ2/ உ.இ(ஊ), நாள் 27.06.2019 (ம) 30.08.2019.
2. துணை இயக்குநர், சுகாதாரம் பணிகள், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்1408/இ5/2011, நாள் 22.07.2019.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந. க.எண்.38631/2019/ ஊராட்சி 3.3, நாள் 22.11.2019.

------

**ஆணை:**

மேலே, மூன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் 22.11.2019 நாளிட்ட கடிதத்தில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான சுமார் ரூ.32.25 இலட்சம் மதிப்புள்ள புல எண்கள்.150/22, 151/2C, 151/6, 151/7B, 151/8B, 151/10B, 151/11B, 151/14, 151/15–ல் உள்ள 0.28.5 ஏர்ஸ் (75 சென்ட்) புன்செய் நிலத்தை நிலக்கிரயமின்றி இலவசமாக பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறைக்கு நிலமாற்றம் செய்ய திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், அவர் தனது கடிதத்தில் திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குட்பட்ட வளாகத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருவதாகவும், அதனை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு தேவையான நிலம் திருவாலங்காடு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பெயரில் தாக்கலாகி இருப்பதனால் அப்புல எண் தொடர்புடைய நிலத்தினை பொது மக்களின் நலன் கருதி நிலக்கிரயமின்றி இலவசமாக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறைக்கு நிலமாற்றம் செய்யக் கோரிய மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவிற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஆட்சேபனை ஏதுமில்லை என்று தெரிவித்துள்ளார்.

2. அரசாணை எண்.209, ஊரக வளர்ச்சி(சி4) துறை, நாள் 17.08.2000 குறிப்பிட்டுள்ளபடி, ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா சொத்துக்களை பிற துறைகளுக்கு மாற்றம் செய்யும் பொழுது தமிழ்நாடு ஊராட்சி விதிகள் 2000 (நிலையான சொத்துக்களை மாற்றம்

செய்தல் மற்றும் நிலமெடுப்பு) பிரிவு 5ல் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு பாத்தியப்பட்ட நிலத்தின் மதிப்பு ரூ.50,000/–க்கு மேல் இருக்கும் பட்சத்தில் அனுமதி வழங்குவதற்கு முன்பு அதற்கான முன்மொழிவினை அரசுக்கு அனுப்பி முன் அனுமதி பெற்ற பின்னர் பிற துறைகளுக்கு மாற்றம் செய்யும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்ட திருவாலங்காடு ஊராட்சிக்கு சொந்தமான சுமார் 32.25 இலட்சம் மதிப்புள்ள புல எண்கள். 150/22, 151/2C, 151/6, 151/7B, 151/8B, 151/10B, 151/11B, 151/14, 151/15–ல் உள்ள 0.28.5 ஏர்ஸ் (75 சென்ட்) புன்செய் நிலத்தினை பொது மக்களின் நலன் கருதி நிலக்கிரயமின்றி இலவசமாக பொது சுகாதாரம் துறைக்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பொருட்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்துக்களைக் கொண்டடைவு செய்தல், மற்றும் மாற்றம் செய்தல்) விதிகள் 2000ன் விதி 5–ன்படி நடவடிக்கை எடுத்து நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம்.
திருவாலாங்காடு ஊராட்சி ஒன்றிய ஆணையர், திருவாலங்காடு ஊராட்சி, திருவள்ளூர் மாவட்டம்.
பொது சுகாதாரத் துறை, திருவள்ளூர் மாவட்டம்
மாநில கணக்காயர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்

**நகல்**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
5/3/2020